## August 19, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் இந்தியாவின் ககன்யான் திட்டத்துக்காக தேர்வான வீரர்களில் ஒருவரான சுக்லா, அனுபவப் பயிற்சி நோக்கங்களுக்காக பயணித்தார்.
   i. விண்வெளிக்குப் அமெரிக்காவின் 'ஆக்ஸியம் ஸ்பேஸ்' நிறுவனத்தின் 'ஆக்ஸியம்-4 ' திட்டத்தின்கீழ் கமாண்டரும் நாசா பெண் விஞ்ஞானியுமான பெக்கி விட்சன், போலந்து வீரர்ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி விஸ்னீவ்ஸ்கி, ஹங்கேரி வீரர் திபோர்கபு ஆகியோருடன் இணைந்து சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் பயணித்தார்.
   ii. இதன்மூலம், சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் பயணித்த முதல் இந்தியர் என்ற பெருமையை சுக்லா பெற்றார்.
2. ஆயிரம் புள்ளிகள் கொண்ட சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதிச்சுற்றில், உலகின் 3-ஆம் நிலை வீராங்கனையான போலந்தின் இகாஸ்வியாடெக், 9-ஆம் நிலை வீராங்கனையான இத்தாலியின் ஜாஸ்மின் பாலினி ஆகியோர் மோதுகின்றனர்.
3. மியான்மரில் வரும் டிசம்பர் 28-ஆம் தேதி முதல் தேர்தல் நடைபெறும் என்று ராணுவ் ஆட்சியாளர்களால் உருவாக்கப் பட்டுள்ள ஒன்றி யத்தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
   i. 2020 தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாகக் கூறி, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகியின் தலைமையிலான அரசை ராணுவம் கடந்த 2021-இல் கவிழ்த்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றியது. ஆங் சான் சூகிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் அவர் 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.
4. கொரிய மின்னணு சாதனத் தயாரிப்பு நிறுவனமான சாம்சங், இந்தியாவின் கிரேட்டர் நொய்டா தொழிற்சாலையில் மடிக்கணினி (லேப்டாப்) தயாரிப்பைத் தொடங்கியுள்ளது.
   i. உலகளவில் சாம்சங் நிறுவனத்தின் இரண்டாது பெரிய உற்பத்தியகம் இந்தியாவில் உள்ளது.
   ii. உற்பத்தியில் அலகு இரண்டாவது பெரியது மற்றும் ஆப்பிளுக்கு அடுத்தபடியாக ஸ்மார்ட்போன்களை ஏற்றுமதி செய்யும் இரண்டாவது பெரிய நிறுவனமாக உள்ளது.
5. சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதபகுப்பாய்வு, இழப்பீடு வரி, மருத்துவ மற்றும் ஆயுள் காப்பீட்டு கட்டணத்துக்கான ஜிஎஸ்டி விலக்கு குறித்த பரிந்துரைகள் வழங்குவதற்காக பல்வேறு மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் மற்றும் பிற அமைச்சர்களை உள்ளடக்கிய 3 குழுக்களின் (ஜிஓஎம்) இருநாள் ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை (ஆக.20) தொடங்குகிறது.

   i. இதில் பங்கேற்று அடுத்த தலைமுறைக்கான ஜிஎஸ்டி சீர்திருத்தம் (ஜிஎஸ்டி 2.0) குறித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் எடுத்து ரைக்கவுள்ளார்.
   ii. தற்போது நடைமுறையில் உள்ள 5%, 12%, 18%, 28% ஆகிய 4 ஜிஎஸ்டி விகிதங்களை 5%, 18% என இரண்டாக குறைக்கவும் 7 பொருள்கள் மீது மட்டும் 40% வரி விகிதத்தை கடைப்பிடிக்கவும் ஜிஓஎம்-க்கு நிதி யமைச்சகம் பரிந்துரைத்தது.

6. ரூ.1 லட்சம் கோடி நிதி ஒதுக்கீட்டில் உருவாக் கப்பட்ட ‘பிரதமரின் வளர்ந்த இந்தியா வேலைவாய்ப்புத் திட்டம் (பிஎம்விபிஆர்வி) என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு தொடங்கி, அதற்கான பிரத்யேக வலைதளத்தையும் அறிமுகப் படுத்தியது.
   i. புதிய திட்டத்தின்கீழ் முதன்முறையாக வேலைக்குச் சேரும் ஊழியர்களுக்கு ஒருமுறை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.
   ii. ஒரு மாத சராசரி ஊதியத்துக்கு (அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி) நிகரான, அதிகபட்சமாக ரூ.15,000 வரை ஊக்கத்தொகை வழங்கப்படும். மேலும், இந்தத்தொகை இரண்டு தவணைகளாகக் கிடைக்கும். ரூ.1 லட்சம் வரை மொத்த ஊதியம் பெறும் ஊழியர்கள் இந்தத் திட்டத்துக்குத் தகுதியானவர்ள் ஆவர்.

7. அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டியில் இந்திய மேலாண்மை நிறுவனத்தை (ஐஐஎம்) அமைப்பதற்கான சட்ட மசோதா மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
   i. ‘இந்திய மேலாண்மை நிறுவனங்கள் திருத்த மசோதா 2025' என்ற பெயரிலான இந்த மசோதாவை எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கிடையே மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிமுகம் செய்தார்.

8. இந்தியா-சீனா இடையிலான கருத்து வேறுபாடுகள் சச்சரவுகளாகவோ, மோதல் போட்டியாகவோ மாறக் கூடாது என்று சீன வெளியுறவு அமைச்சர் வாங்யியிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.
   i. சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி 2 நாள் பயணமாக இந்தியா வந்தார். இந்தியா- சீனா இடையிலான எல்லை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அவர் இந்தியா வந்துள்ள நிலையில், புது தில்லியில் அவர் அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தார்.
   ii. இருநாடுகளுக்கு இடையிலான எல்லை விவகாரம் தொடர்பான இந்திய-சீனசிறப்பு பிரதிநிதிகளின் 24-ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை புது தில்லியில் செவ்வாய்க்கி ழமை நடைபெற உள்ளது. அதில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல், வாங் யி பங்கேற்க உள்ளனர்.

9. ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.அப்போது, அண்மையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பை சந்தித்துப் பேசியபோது விவாதிக்கப்பட்ட விஷயங்கள் குறித்து மோடியிடம் அவர் விளக்கமாக எடுத்துரைத்தார்.

i. அலாஸ்காவில் டிரம்ப்பை புதின் சந்தித்துப் பேசினார். உக்ரைன்-ரஷியா போர் நிறுத்தமே இந்தச் சந்திப்புக்கு முக்கியக் காரணமாக இருந்தது.
ii. ஆனால், போர் நிறுத்தம் குறித்து எவ்வித முடிவும் எட்டப்படவில்லை. இது அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கு பின்னடைவாகக் கருதப்பட்டது.

10. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**

i. சி.பி.ராதாகிருஷ்ணன் - மகாராஷ்டிர ஆளுநர் மற்றும் துணை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்